9

# வடக்கு இராஜ்யம், கி.மு. 975–722

*ரெகொபெயாம் அரியணை ஏறியதிலிருந்து*
*சமாரியாவின் வீழ்ச்சி வரையிலும்*
*1 இரா. 12-22, 2 இரா. 1-17*

## I. அறிமுகம்.

இந்த இடத்திலிருந்து, எபிரெய வரலாற்றின் விரிந்து பரவும் நீரோட்டமானது இரு நீரோடைகளாய்ப் பிரிகின்றது. (இந்த) வரலாற்றின் விவரங்கள் அதிகம் சிக்கலானவைகளாகின்றன. இதுவரை நமது அத்தியாயங்கள் நாள் வரிசையின்படி கணக்கிடப்பட்ட கால வேளைகளுக்கு இணைவாகப் பொருத்தம் கொண்டுள்ளன. இதே திட்டமானது இந்த அத்தியாத்திற்கும் அடுத்த அத்தியாயத்திற்கும் "இரட்டை அரசு" மற்றும் "யூதா மட்டும்" என்பவற்றைத் தலைப்புகளாகக் கொடுப்பதாயுமிருக்கும்; வரலாற்றின் ஒருமைப்பாட்டுக்காகவும் மற்றும் எளிமைக்காகவும் நாடுகள் பிரிந்திருக்கின்றதின்படியே இவ்விரு இராஜ்யங்களையும் தனித்தனியே கையாளுவது மிகவும் சிறந்ததாகக் காணப்படுகின்றது. ஆகியவற்றிற்கு சிறந்ததாகக் காணப்படுகின்றது.

***1. பிளவின் தொடக்கம்.****—அ. இதன் வேர்கள்.*—''இராஜ்யம் நொறுங்குதல் என்பது ஒரு நாளில் ஏற்பட்டதாயிராமல், நூற்றாண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியாக இருந்தது.'' யோசுவாவின் காலத்திலிருந்து, தாவீதின் காலம் வரையிலும் யூதாவின் கோத்திரத்தைக் காட்டிலும், யோசேப்பின் இரண்டு (எப்பிரயீம், மனாசே) கோத்திரங்களும், பென்யமீன் கோத்திரமும் முன் சிறப்புரிமையைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தன. யோசுவா, தெபொராள், சாமுவேல் ஆகியோர் எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர்; கிதியோன் மற்றும் அபிமெலேக்கு ஆகியோர் மனாசே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர்; சவுலும் யோனத்தானும் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர்.

எப்பிரயீம் கோத்திரமானது விசேஷமாக, மேன்மைத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் மேட்டிமையான கருத்துணர்வை மீண்டும் மீண்டும் காண்பித்திருந்தது;[1] இதன் தலைவர்கள் யூதாவின் ஆளுகையிலிருந்து முறித்துக் கொண்டு வெளியே செல்ல தங்களுக்குச் சமயம்

நேரிடுமா என்று காத்துக் கொண்டிருந்தார்கள் என்பதை மட்டுமே நிகழ்ச்சிகள் நிரூபித்தன.

*ஆ. ரெகொபெயாம் அரியணை ஏறுதலும் அவர் கொள்கையும்.*—"சாலொமோன் ஆயிரம் மனைவிகளையும், ஒரே ஒரு மகனையும் கொண்டிருந்தார். அந்த மகனும் அறிவற்றவனாயிருந்தார்." ரெகொபெயாம் அரியணை ஏறிய பொழுது, மக்கள் அவரிடம் வந்து, சாலொமோனின் ஆட்சியின் கீழ் தங்களை மிகவும் ஒடுக்கியிருந்த வரிவிதிப்புகளை இலகுவாக்கும்படி வேண்டுகோள் விடுத்தார்கள். ரெகொபெயாம், தனக்கு ஆலோசனை கூறிய முதியவர்களின் அறிவுரையைப் புறக்கணித்து விட்டு, இளம் மனிதர்களின் ஆலோசனையைப் பின்பற்றிக் கொண்டு, தனது சுண்டு விரலானது தனது தந்தையின் தொடையே விடப் பருமனாயிருக்கும் என்று பதில் அளிக்கின்றார்.

*இ. யெரொபெயாமும் கலகமும்.*—சாலொமோன், யெரொபெயாம் என்ற திறமைமிக்க அதிகாரி ஒருவரைப் பணியில் வைத்திருந்தார். அவர் எப்பிராயீம் இனத்தவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். தேவனுடைய ஆட்சியின் அடிப்படைகளை மீறும் செயலாக சாலொமோனிடம் இருந்த விக்கிரக ஆராதனையின் நடக்கைக்கான சாபமாக அரசானது பிரிக்கப்பட்டு, யெரொபெயாம் பத்துக் கோத்திரங்களின்மீது அரசாளுவார் என்பது அகிசா என்ற தீர்க்கதரிசி முன்னுரைத்திருந்தார். சாலொமோனின் சந்தேகத்திற்குள்ளான யெரொபெயாம் எகிப்திற்கு ஓடிப் போனார், ஆனால் சாலொமோனின் மரணத்தின்போது மீண்டும் திரும்பி வந்தார். வரிகளை இலகுவாக்குவதற்கு ரெகொபெயாம் வன்மையாய் மறுத்து விட்டதின் பேரில் பத்து கோத்திரங்களினால் யெரோபேயாம் தலைமையில் ஒரு கலகம் நடத்தப்பட்டது. இதன் விளைவாக இரண்டு போட்டி அரசுகள் ஏற்பட்டன:

(1) யூதாவும் பென்யமீனும் என்ற இரு கோத்திரங்களைக் கொண்ட தெற்கு இராஜ்யமானது யூதா என்று அறியப்பட்டது.

(2) பத்து கோத்திரங்களைக் கொண்ட வடக்கு இராஜ்யம் இஸ்ரவேல் என்று அறியப்பட்டது.

***2. இரு இராஜ்யங்களின் ஒப்பீடு.***—*அ. எல்லையும் மக்கள் தொகையும்.*—ஒரு முக்கியமான கருத்தமைவில், வடக்கு இராஜ்யமானது தெற்கு இராஜ்யத்தை விட அதிகமான வகையில் நாடாயிருந்தது; இது பன்னிரெண்டில் பத்து கோத்திரங்களைக் கொண்டிருந்தது, எனவே இது இஸ்ரவேல் என்ற நாட்டின் பெயரைத் தக்க வைத்துக் கொண்டது. இதன் எல்லைகள் விரிவாயிருந்தது மட்டுமின்றி அவைகள் இயற்கை வளங்களிலும் வரலாற்றுத் தொடர்பான இணைவுகளிலும் மிகவும் வளம் பொருந்தியவைகளாயிருந்தன. யூதாவானது எருசலேமையும் எபிரோனையும் கொண்டிருக்கையில், இஸ்ரவேலானது சீகேமை அதன் செல்வத்தின் நினைவாக கொண்டிருந்தது; ஆசரிப்புக் கூடாரத்தின் முந்திய இருப்பிடமாய் இருந்த சீலோ; சாமுவேல், தீர்க்கதரிசிகளுக்குப் பள்ளிகளைத் தோற்றுவித்திருந்த ஊர்களான பெத்தேல், ராமா மற்றும் கில்கால்; மற்றும் நீண்ட காலமாக ஆராதனையிடமாய் இருந்த தாண் (நியா. 18:14-31) ஆகியவை

இஸ்ரவேலின் எல்லைக்குட்பட்டிருந்தன. மேலும் அந்நாள் வரைக்கும் தக்க வைக்கப்பட்டிருந்த தாவீது பேரரசின் ஆதரிப்புகளும் உடன்படிக்கைகளும் பெரும்பாலும் இஸ்ரவேலுக்குரியவைகளாகவே இருந்தன. இருப்பினும், காலங்கள் கடந்த பொழுது, லேவியர்கள் மற்றும் ஆவிக்குரிய பிற கூறுகள் அதிகமாய் யூதாவுக்கு இடம் பெயர்ந்ததாலும் இவற்றை இஸ்ரவேல் இழந்து போயிற்று (2 நாளா. 15:9, 10).

*ஆ. அவர்களின் மதம்/மார்க்கம்.*—தொடக்கம் முதல் முடிவு வரையிலும் இஸ்ரவேலின் அரசர்கள் விக்கிரகாராதனைக்காரர்களாகவே இருந்தார்கள், மற்றும் மக்களும் அதிகம் அதிகமாய் அவ்வாறே வளர்ந்தார்கள். இருப்பினும், தொடக்க காலத் தீர்க்கதரிசிகளில் ஏறக்குறைய யாவரும் இஸ்ரவேலைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது இஸ்ரவேலுக்கு ஊழியம் செய்ய அனுப்பப்பட்டவர்களாகவோ இருந்தனர் என்பது கவனிக்க ஆர்வமுள்ள நிகழ்ச்சியாக உள்ளது. அபியா, செமேயா, எலியா, எலிசா, மிக்காயா, யோனா, ஓசியா, ஆமோஸ், சகரியா, யேகூ ஆகியோர் யாவரும் பிறப்பினாலோ அல்லது ஊழியத்தினாலோ இஸ்ரவேலுக்குரியவர்களாகவே இருந்தார்கள், இவர்கள் வடபகுதியின் தீர்க்கதரிசிகளாகவே இருந்தார்கள். யூதா அடிக்கடி விக்கிரகாராதனையுள்ளவர்களாய் இருந்தாலும், பெரும்பாலும் யெகோவாவுக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள்.

*இ. உறுதித் தன்மையின்/நிலைப்புத்தன்மையின் கூறுகள்.*—பின்வரும் உண்மைகளில் யூதாவின் மாபெரும் நிலைப்புத் தன்மை காணப்படுகின்றது: (1) யூதாவுக்கு தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோரின் நகரமும், தேவாலயம் இருந்த நகரமுமான எருசலேம் மட்டுமே எப்பொழுதுமே தலைநகராயிருந்தது. இஸ்ரவேலுக்கோ, ஒன்றின் பின் ஒன்றாக சீகேம், திர்சா, சமாரியா என்று பல தலை நகரங்கள் இருந்தன. (2) இஸ்ரவேலானது இருநூற்று ஐம்பது ஆண்டுகள் மட்டுமே தொடர்ந்து நிலைத்திருந்தது, ஆயினும் அந்த கால வேளையில் அதில் ஒன்பது வம்சங்களைச் சேர்ந்த பத்தொன்பது அரசர்கள் அரியணையில் அமர வந்தனர். ஒவ்வொரு புதிய வம்சமும் தனது இரத்தத்தினால் துடைத்து எறியும்படும்படி (பிறரின்) இரத்தம் சிந்திய புரட்சியினால் (அரசாள்வதை) தொடங்கின. யூதாவோ, வன்முறையால் அதிகாரத்தைக் கைப்பற்றிய அத்தாலியாளைத் தவிர, தாவீதின் வம்சத்தைச் சேர்ந்த இருபது அரசர்களால் மட்டுமே ஆளப்பட்டதாக சுமார் நானூறு ஆண்டுகள் நிலைத்து நின்றது.

## II. நான்கு கால கட்டங்கள்.

வடக்கு இராஜ்யத்தின் வரலாறானது மதரீதியாக, சம அளவற்ற நான்கு கால கட்டங்களாகப் பிரிக்கப்படலாம்:

***1. விக்கிரக ஆராதனை வேர் கொள்ளுதல்; ஐம்பது ஆண்டுகள், மூன்று வம்சங்கள், ஐந்து ஆளுகைகள்.***—இதில் முன்னோடித் தலைமைப் பண்பினராய் இருப்பவர் இந்த இராஜ்யத்தைத் தோற்றுவித்த யெரொபெயாமே ஆவார். இவர் தமது போட்டி (அரசின்) தலைநகரில் இருந்த ஆராதனைக்குரிய ஒரே (இட) மையத்தின் செயல்விளைவினால்

பயம் அடைந்தவராக தனது ஆளுகைப்பகுதிகளில் தொலைதூர வடக்கில் தாண் என்ற இடத்தையும், தெற்கு முனையில் பெத்தேல் என்ற இடத்தையும் தேர்ந்தெடுத்தார். இவையிரண்டுமே பரிசுத்த இடங்களாக மதிக்கப்பட்டு, ஏற்கனவே புகழ் பெற்றிருந்தன. இவ்விடங்களில் அவர் கன்றுக்குட்டி ஆராதனை என்று அறியப்பட்ட விக்கிரகாராதனை வடிவத்தை அமைத்து வைத்தார். இது, சீனாய் மலையடிவாரத்தில் இஸ்ரவேலர்கள் வீழ்ந்து போன விக்கிரகாராதனையின் வடிவத்தை நினைவுகூருவதாயிருக்கும், மற்றும் யெரெபெயாமே கூட சமீபத்தில் நாடு கடத்தப்பட்டவராய் எகிப்தில் இருந்திருந்தார் என்பதையும் இது நினைவுபடுத்தும். இது அநேகமாக யெகோவாவைப் புறக்கணித்துவிடுதல் என்று அர்த்தப்படுத்தியிருக்காது, ஆனால் காணப்படாத தேவனுக்கு காணப்படுகிற ஒரு உருவத்தைப் பயன்படுத்துதலாக இருந்திருக்கும். அப்படியானால், இது முதலாம் கட்டளையையல்ல, மாறாக இரண்டாம் கட்டளையை மீறிய செயலாய் இருந்தது. சாலொமோனின் விக்கிரகாரதனைகள் நமக்கு மிக மோசமானவைகளாய்க் காணப்படுகின்றன, இருப்பினும், பரிசுத்த வரலாற்றாளர் திகில் இன்றி யெரொபெயாமைக் குறிப்பிட முடியாதிருந்தது. "நேபாத்தின் மகனான யெரொபெயாம் பாவம் செய்து இஸ்ரவேலை(யும்) பாவம் செய்யும்படி வழிநடத்தினான்,"[2] என்பது அவர் என்றென்றைக்கும் பிறருக்கு எச்சரிக்கையாயிருக்கும்படிக்குக்[3] கூறப்பட்ட வார்த்தைகளின் வடிவாக உள்ளது. வழிகளின் பிரிவில் யெரொபெயாம் நின்றிருந்தார். தெய்வீக நியமனத்தினால் அவர் ஒரு வம்சத்தையும் இராஜ்யத்தையும் தோற்றுவிக்க வேண்டியவராயிருந்தார். அந்த வம்சமும் இராஜ்யமும் மகிமையுள்ள ஒரு முடிவை/அடைவிடத்தைக் கொண்டிருந்திருக்கலாம்; ஆனால் அது ஆபிரகாமோ அல்லது யெரொபெயாமோ யாராயிருப்பினும் அவ்வினத் தோற்றுவிப்பாளரைப் பொறுத்த விஷயமாயிருந்தது; மற்றும் யெரொபெயாமோ தனது கொள்கையினால், பாதி உலகப் பிரகாரமானவராகவும், பாதி சமய ரீதியானவராகவும் இருந்து, இஸ்ரவேலரின் வளமையை என்றென்றைக்குமாகத் தகர்த்து விட்டார். அவர் ஒரு புதிய ஆசாரியத்துவத்தையும் மதப் பண்டிகைகளுக்கான ஒரு புதிய முறைமையையும் உண்டாக்கினார். இக்கொள்கையானது அக்காலத்திற்கு அரசியல் ரீதியாக ஞானமுள்ளதாகக் காணப்பட்டிருக்கலாம், ஆனால் முடிவில் இது அழிக்கக் கூடியதென்று நிரூபிக்கப்பட்டது. இஸ்ரவேலின் அரசியல் பாதுகாப்பு அதன் மதரீதியான தூய்மையில் தான் இருந்தது. இந்தக் கால கட்டத்தின் எஞ்சிய அரசர்களான நாதாப், பாஷா, ஏலா மற்றும் கடைசி சிம்ரி ஆகியோர் வஞ்சகமாய் அரசைக் கைப்பற்றி ஏழு நாட்களில் மகிமையற்ற ஆட்சி செய்து விழுந்து போன பாஷாவைப் போன்றவர்களாகவே இருந்தனர். இந்தக் காலகட்டம் முழுவதிலும் இஸ்ரவேலும் யூதாவும் அழிவூட்டும் வெறுப்பின் நிலையில் இருந்து, அவ்வப்போது வெளிப்படையான யுத்தத்தில் ஈடுபட்டனர்.

***2. விக்கிரகாராதனை வெற்றி முழக்கமிடுகிறது; ஐம்பது ஆண்டுகள், ஒரு வம்சம், நான்கு ஆளுகைகள்.***—*அ. உம்ரியும் புதிய தலைநகரும்.*—உம்ரி என்ற பெயர் கொண்ட இராணுவ அதிகாரிதான் இவ்வம்சத்தின் தோற்றுவிப்பாள

ராயிருந்தார். வஞ்சகமாய் ஆட்சியைக் கைப்பற்றியிருந்த சிம்ரியைத் தாக்கி வீழ்த்தி விட்டு, திப்னி என்ற பெயர் கொண்ட துணிகரச் செயல் செய்பவனுடன் ஒரு உள்நாட்டு யுத்தம் நடத்தி இவர் (உம்ரி) பாதுகாப்பாய் அரியணையில் அமர்ந்தார். சிம்ரி திர்சாவில் இருந்த அரண்மனையைத் தனது தலைமையிலேயே நெருப்பிட்டு எரித்தார் (அவரும் அதில் இறந்தார்). உம்ரி திர்சாவைக் கைவிட்டு, சமாரியாவை வாங்கி அதைக் கட்டியெழுப்பினார், அதில் அவ்வரசு வீழும் வரையில் தலைநகராய்த் தொடர்ந்திருந்தது, மற்றும் அவர் அப்பெயரை (சமாரியா) ஒரு மாவட்டத்திற்கு அளித்து, பின்பு மக்களுக்கும் அப்பெயரை வழங்கச் செய்தார்.

*ஆ. ஆகாப்; யேசபேல்; பாகாலுக்கு வழிபாடு.*—உம்ரியின் மகன் ஆகாப், சீதோனின் அரச ஆசாரியராயிருந்த ஏத்பாகாலின் மகள் யேசபேலைத் திருமணம் செய்து கொண்டார். புறதெய்வ வழிபாட்டுக் கொள்கையுடைய இரத்தமும் மதமும், இரு இராஜ்யங்களிலும் இருந்த எபிரெய அரச குல வம்சங்களின் பல தலைமுறைகளாக விஷம் போலப் பாய்ந்தோடிக் கொண்டிருந்தன. அவள் அதிகார விருப்பமும் வெறி கொண்ட வைராக்கியமும் உடைய பெண்ணாயிருந்தாள், இவளது பெயரானது ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகள் அளவாக ஒரு கூற்றுச் சொல்லாக வெறுக்கப்படத்தக்க பெண்களைக் குறிக்கப் பயன்பட்டு வந்தது. அவள் சிற்றின்பத்திற்கேதுவான பாகால் வணக்கத்தை அறிமுகப்படுத்தினாள், மற்றும் யெகோவாவைத் தொழுது கொள்வதற்கு எதிராகக் கடுமையான துன்புறுத்தல்களைச் செய்யத் தொடங்கினாள், யெகோவாவை வணங்குதல் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருந்தாலும் இவள் செய்த துன்பங்களினால் வேரறுக்கப்பட்டது.

*இ. எலியாவின் யுகம்.*—தீர்க்கதரிசியான எலியா இக்கால கட்டத்தில் மிக மேன்மையான பாத்திரமாய் இருந்தார். அவர் ஆகாபின் பாவங்களைக் குறித்து ஆகாபிடம் தைரியமாய் எதிர்ப்புரை கூறி நின்றார்; நாடு முழுவதும் விசுவாசத்தை விட்டு விலகிச் சென்றதற்குத் தண்டனையாக மூன்று ஆண்டுகள் பஞ்சம் ஏற்படும் என்று தீர்க்கதரிசனம் கூறினார்; கேரீத் ஆற்றங்கரையில் காகங்களினால் போஷிக்கப்பட்டார் மற்றும் யேசபேலின் சொந்த ஊரான சீதோனுக்கடுத்த சாறிபாத் என்ற ஊரில் இருந்த ஒரு விதவையாலும் போஷிக்கப்பட்டார்; கடைசியில் மீண்டும் ஆகாப்பை எதிர் கொண்டு கர்மேல் மலையின் மீது நாட்டவர் அனைவரையும் கூடும்படி அறிவிப்பு செய்து, அங்கு பாகால் மற்றும் அஸ்தரோத் என்ற தெய்வங்களின் நூற்றுக்கணக்கான ஆசாரிய - தீர்க்கதரிசிகளிடத்தில் ஒரு சோதனையை முன்மொழிந்தார்: அக்கினியின் மூலம் பதில் கொடுக்கின்றவரே நாட்டின் தேவனாய் இருக்க வேண்டும். பயபக்தியடைந்த மக்கள் கூட்டமானது, எலியாவின் பலி (அக்கினியால்) பட்சிக்கப்பட்ட தெய்வீக பதில்செயலைக் கண்டு அக்கணப் பொழுதுக்கு விக்கிரகாராதனையிலிருந்து திரும்பி கள்ள தீர்க்கதரிசிகளை அழித்துப்போட்டது. எலியாவின் ஜெபத்திற்கு இன்னும் பதில் அளிக்கும் வகையில், நீண்ட காலப் பஞ்சமானது அதிகமான மழையினால் முறி(யடி)க்கப்பட்டது, மற்றும் எலியா ஆகாபின் இரதத்திற்கு முன்பாக வெற்றிகரமாய் யெஸ்ரபேலுக்கு ஓடிச் சென்றார். ஆனால்

நாணமற்ற யேசபேல் பயமுறுத்தும் செய்தியொன்றை எலியாவுக்கு அனுப்பினாள், அவர் ஓரேபுக்கு ஓடிப்போனார். அங்கு தேவன், மனச் சோர்வடைந்த தீர்க்கதரிசியைச் சந்திக்கின்றார், அவரிடத்தில் பாகாலுக்கு ஒருக்காலும் முழங்காற்படியிடாத ஏழாயிரம் பேர் இன்னும் மீதம் இருப்பதாக, "இஸ்ரவேலுக்குள் இஸ்ரவேல்" இருப்பதாகக் கூறி, அவர் (எலியா) தமது ஊழியத்தை முடிக்கும்படி திரும்பி அனுப்பி வைக்கிறார். எலியா திரும்புகின்றார், தமக்குப் பதிலாக தீர்க்கதரிசியாய் இருக்க எலிசாவை அபிஷேகம் செய்விக்கின்றார், ஆகாபின் வீட்டாருக்கு அழிவு வரும் என்று அறிவிக்கின்றார், மற்றும் அக்கினி இரதத்தினால் பரலோகத் திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றார், உம்ரி மற்றும் ஆகாப் ஆகியோரின் வம்சங்கள் இரக்கமற்ற யேகூ என்பவனால் இரத்தம் சிந்த அழிக்கப் படுகின்றன. மோசேக்குப் பிறகு வேறு எந்த தீர்க்கதரிசியும் எபிரெயர்களின் சிந்தைகளில் இவ்வளவு தெளிவான கருத்துப் பதிவை விட்டுச் சென்ற தில்லை. இவரது பெயரைப் பற்றிப் புராணங்களும் பழமொழிகளும் ஒன்று கூட்டி (கூறப்பட்டு) வந்தன, மற்றும் அவரது மறுவருகையானது பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கதரிசியினாலும் புதிய ஏற்பாட்டு கால மக்களா லும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், அவர் எழுதிய தாகவோ அல்லது பேசியதாகவோ ஏதொன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. அவரது மகா ஒப்பனையான யோவான் ஸ்நானன் போலவே அவர் (எலியா) கூறியவைகள் அல்ல, மாறாக அவர் செய்தவைகளே அவருக்கு எபிரெய தீர்க்கதரிசிகளின் வரிசையில் அவருடைய உயர்வான இடத்தைக் கொடுத்துள்ளன.

*ஈ. அரசியல் சார்ந்த உறவுகள்.*—அகசியா மற்றும் யோராம் ஆகியோர் ஆகாபின் வீட்டில் எஞ்சியிருந்த அரசர்களாவார்கள். ஆகாபின் ஆளுகை யின் பின்பாதி வரையில் யூதாவின் மீதான வெறுப்பு தொடர்ந்தது, அதன் பிறகு சீரியாவுக்கு எதிராக (இரு நாடுகளும்) ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையானது இரு அரசக் குடும்பங்களுக்கிடையில் நடந்த கலப்புத் திருமணம் ஒன்றினால் உறுதியாய்ப் பிணைக்கப்பட்டது. சீரியா வுடன் அடிக்கடி யுத்தங்கள் நடந்தன, மோவாப் நாடு தாவீதின் காலத்தி லிருந்து தொடர்ந்து பெற்றுக் கொண்டிருந்த சார்பு நிலையைத் தூக்கி யெறிந்தது. மோவாபியரின் கல்[4] என்பதின் மூலம் இந்தக் காலகட்டத்தின் மீது ஆர்வம் நிறைந்த பக்க வெளிச்சம் வீசப்படுகின்றது. தூரத்தில் இருந்ததும், மத்திய தரைக் கடல் பகுதியில் ஒரு காலத்தில் ஆளுகையின் வல்லமை நிறைந்ததுமாய் இருந்த அசீரியாவானது மறை நிலையில் இருந்து எழும்பி நூற்று ஐம்பது ஆண்டுகள் செயல்வலிவுள்ளதாகி மேற்கில் இருந்த பல சிற்றரசுகளை விழுங்கிற்று. இந்தக் கால கட்டத்திலிருந்து நமது வரலாற்றுப் பாடத்தில் அசீரியக் கல்வெட்டுகள் அதிகமாய்/அடிக்கடி கருத்தொளி தருகின்றன.

***3. விக்கிரகாராதனை தடை செய்யப்படுதல்; நூறு ஆண்டுகள், ஒரு வம்சம், ஐந்து ஆளுகைகள்.***—இந்தக் காலத்தில்தான் சிறிய இராஜ்யம் மிகவும் செழிப்புள்ளதாயிருந்தது; ஆனால் இது இஸ்ரவேலின் "இந்திய கோடைக்காலமாய்," அணையப் போகும் நெருப்பின் கடைசி ஜுவாலை

யாய் இருந்தது. எலிசா கட்டியெழுப்பும் வேலையைத் துவங்கி எலியாவை விட நல்ல வெற்றியைக் கண்டார். வம்சத்தைத் தோற்றுவித்தவரான யேகூ, ஒரு திடீர் புரட்சியினால் ஆகாபின் குடும்பத்தை முற்றிலுமாய் அழித்தார் மற்றும் அதோடு பாகால் வழிபாட்டையும் அழித்தார்; ஆனால் யெரொபேயாமின் கன்றுக்குட்டியை வணங்குதலை மீண்டும் துவக்கினார். யோவாகாஸ், யோவாஸ், இரண்டாம் யெரொபேயாம் மற்றும் சகரியா ஆகியோர் அவனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தார்கள். இரண்டாம் யெரொபேயாம் நாற்பத்தொன்று ஆண்டுகள் அரசாட்சி செலுத்தி மிகவும் வல்லமையான நிலைக்கு இராஜ்யத்தை உயர்த்தினான். இவர் யோனா தீர்க்கதரிசியால் உதவி செய்யப்பட்டார். மேற்கு ஆசியாவிலேயே விரைவாக இப்போது உயர்ந்து கொண்டிருந்த நினிவே பட்டணத்தில் ஊழியம் செய்ய இவர் (யோனா) அனுப்பப்பட்டிருந்தார். தீர்க்கதரிசி ஓசியாவும் கூட இஸ்ரவேலின் விக்கிரகாராதனைக்கு எதிராக தன் அழகான பேச்சினால் குரல் எழுப்பினார்.

***4. விக்கிரகாராதனை அழிவில் முடிவடைதல்; ஐம்பது ஆண்டுகள்; நான்கு வம்சங்கள்; ஐந்து ஆளுகைகள்.***—சல்லூம், மனாயீம், பெக்கக்கியா, பெக்கா மற்றும் ஓசியா ஆகியோர் அசீரியாவின் கைபொம்மைகளாக மட்டும் இருந்த அரசர்களில் சிலர் ஆவர். மனாயீமின் ஆட்சிக் காலத்தில் அசீரியர்கள் (மக்களை) நாட்டை விட்டு வெளியேற்றும் வேலையைத் தொடங்கினார்கள். சற்றே வலிவு கொண்ட அரசான பெக்கா, அசீரியாவுக் கெதிராக சீரியாவுடனும், அசீரியாவுக்குக் கப்பம் கட்டிய சிறிய (நாடான) யூதாவுடனும் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளுகின்றார். அசீரியாவின் இரண்டாம் திக்லேத் பிலேசர் சீரியாவின் அரசிற்கு ஒரு முடிவு கட்டி, இஸ்ரவேலின் மீது கடுமையான வரி விதிக்கின்றார். அசீரியாவின் நுகத்தி லிருந்து ஓசியா கலகம் செய்கின்ற பொழுது முடிவு வருகின்றது. நான்காம் சல்மனேசர் நாட்டின்மீது படையெடுத்து சமாரியாவை முற்றுகை யிடுகின்றார். நகரமானது மூன்றாண்டுகளாகப் பிடிக்கப்பட்டிருந்தது, அந்த வேளையில் அசீரிய அரியணையில் சல்மனேசருக்கு அடுத்தபடியாக சார்கோன் பதவியேற்கின்றார், இவர் சமாரியாவின் மீதான படை யெடுப்பையும் முற்றுகையையும் முடிவு செய்து, பத்து கோத்திரத்தாரையும் அவர்கள் ஒருக்காலும் மீண்டும் திரும்பியிராத சிறையிருப்பிற்கு இழுத்துச் செல்லுகின்றார். இவர்கள் யெகோவாவிற்கும் தங்கள் இன ஊழியத்திற்கும் உண்மையற்றவர்களாகி தங்கள் இன அடையாளத்தை என்றென்றைக்கு மாக இழந்து போகின்றனர். (சமாரியா/இஸ்ரவேல்) நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட அசீரியர்கள் அங்கு பத்து கோத்திரங்களில் எஞ்சியிருந்தவர் களுடன் இரண்டறக் கலக்கின்றனர். இந்த கலப்பினமானது இழிவான மதத்துடன் நூற்றாண்டுகளாகத் தொடர்ந்திருந்தது, மற்றும் கிறிஸ்துவின் காலத்தில் சமாரியர்கள் என்று கூறப்பட்ட இனத்தைக் கொண்டிருந்தது.

குறிப்புகள்

[1]*யோசு. 17:14-18; நியா. 8:1-3; 12:1-6ஐக் காணவும்.* [2]*1இரா. 14:16.* [3]*இவ்விதமாய் யெரொபெயாம் வெளிப்படையாய் வெட்கத்திற்குள்ளானார்.* [4]See Edersheim, “Hist. of Israel and Judah,” Vol. VI., pp. 112-117.